**இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனி - 2021**

**------------------------------------------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிழதிகூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்காகன கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை சிறிய மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினை பேணி பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்தக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத:தக்களுக்காக கணக்குகளில் பொறுப்பினைப்சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசங்கள் காணப்படுமாயின் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவனத்தினால் பேணுவது அத்தியவசியமானதாகும். பெதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர்கள், கொடுப்பனவு வவுச்சர்கள் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுவது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான நடைமுறையற்ற சொத்துக்கள் கணக்குகள் மற்றும் அச்சொத்துக்கள் தொடர்பாக பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கீடு செய்யும் கணக்குகள், பொதுப் பேரேட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் பரீட்சை மீதியிலும் அப்பெறுமதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக சரிசெய்தல்களைச் செய்வேன். | பொதுப் பேரேட்டினை சரியாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2 இலங்கை சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் ரூபா 5,366,485 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வினைத்திறனான ஆயுட்காலம் முடிவடைந்து காணப்பட்டிருந்தும் கணக்காய்வு ஆண்டின் போதும் அச்சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் இலக்கம் 17 ஆம் பகுதியின் பந்தி இலக்கம் 17.1.9 இன் பிரகாரம் அச்சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தினை சரியாக மதிப்பீடு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | கம்பனியின் நிகழ்கால நிதிநிலைமைக்கு இணங்க சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மீள்மதிப்பிற்காக செலவு செய்தல் சிக்கலான நிலைமையில் உள்ளது. எனினும் இது மிகவும் அத்திவசியமான ஒரு செயற்பாடாக உள்ளதனால் எதிர்காலத்தில் அச்செயற்பாட்டினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,500,000 கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட GG-9396 ஆம் இலக்க கெப் வாகனம் கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்தும் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 02 ஆம் பகுதியின் பந்தி இலக்கம் 19 இன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் உரிய சொத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த கெப் வாகனம் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஒரு கெப் வாகனமானதுடன் அதனை கம்பனியால் பெறுப்பேற்றதன் பின்னர் சொத்துக்களுக்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 23 ஆம் பகுதியின் 23.14 ஆம் பிரிவின் கீழ் ஒரு வருமானமாக இனங்காண்பதற்கு முடியாத ரூபா 248,482 தொகையான வருமானம் | இச்சேவை இன்றுவரை நிறைவேற்றப்பட்டிருக்காத துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கிறேன். எனவே இது தொடர்பாக | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாட்டு வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இன்னும் தேடிப்பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.. | |
| (ஈ) | சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 10 ஆம் பகுதியின் 10.21(அ) பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பிழைகளை சரிசெய்யும் போது நிதிக்கூற்றுக்களில் முன்னைய அண்டிற்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்களையும் மீண்டும் சரியாக சமர்ப்பிக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் பிழையை சரிசெய்து தொடர்பாக செலுத்த வேண்டிய பணிக்கொடை மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்தின் பெறுமதிகள் சரிசெய்வது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளில் கணக்குகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களுக்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு பணத்தை செலுத்துவதன் தாமதத்தின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மிகைக் கட்டணம் முறையே ரூபா 259,600 மற்றும் ரூபா 29,205 தொகைளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளில் கணக்குகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களுகக்காக ஒதுக்கீடு செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள எற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செலவுகளைக் கட்டுப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | KJ-4483 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் வருடாந்த காப்புறுதிப் பணமாக ரூபா 43,873 தொகை 2021 யூலை 01 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 2022 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 14,664 தொகையை அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்கீடு செய்யாது மீளாய்வாண்டிற்கான செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை அடுத்து வரும் ஆண்டுகளின் போது நிர்ணயிக்கப்பட்டவாறு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை ஒப்புதல் அளித்தல் சபைக்கு (Accrediation Board) 2021 யூலை 01 ஆந் திகதி 2021/2022 ஆம் ஆண்டிற்காக வருடாந்த ஒப்புதல் அளித்தல் கட்டணத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 150,000 ஆன முழுப்பணத்தில் ரூபா 129,863 மாத்திரம் 2021 ஆம் ஆண்டு தொடர்பானதாக இருந்த போதிலும் அப்பணம் மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை அடுத்து வரும் ஆண்டுகளின் போது நிர்ணயிக்கப்பட்டவாறு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் அலுவலகம் 2023 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் அமைச்சு வளவில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் மரக் கூட்டுத்தாபனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய அலுவலக வாடகை ரூபா 1,415,849 தொகை மரக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் மூலம் இதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் கணக்கீட்டு குறிப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நிதி நிலைமையின் அடிப்படையில் இப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு இன்றுவரை முடியாதிருந்த போதிலும் எதிர்காலத்தில் இதனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் 2020 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமமாவைகளினதும் பெறுமதி ரூபா 10,071,017 ஆக இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான காசும் காசுக்குச் சமமானவைகளினதும் ஆரம்ப மீதியாக ரூபா 71,017 காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் நிலையான வைப்புக்கள் காசும் காசுக்குச் சமனானவைகளின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் அந்த நிலையான வைப்பு நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது முன்னைய ஆண்டிற்கான பிழைகளை சரிசெய்தலாக ரூபா 702,500 செம்மையாக்கப்பட்டிருந்தது | கடந்த கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் இச்செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) வருமானம் | - | 2021 ஆம் ஆண்டு தொடர்பாக இரத்துச் செய்யப்பட்டது எனக் கூறிய 07 இன்வொயிஸ்கள் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்படாததுடன் அந்த இன்வொயிஸ்களை இரத்துச் செய்வதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கம்பனியால் வருமானத்தை சேகரித்தல் மற்றும் கணக்கீடு செய்தல் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க கம்பனியால் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 7,124,960 வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்ட 07 இன்வொயிஸ்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் சமர்ப்பிக்கப்பட்ட இன்வொயிஸ்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து வருமானங்களையும் கணக்கீடு செய்வதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது ஸ்தாபிக்கப்பட்டு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) செயலாற்றல் | - | கம்பனியின் நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பான தகவல்களை 2023 யூலை 27 ஆந் திகதி கணக்காய்விற்கு வழங்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு | பதில் வழங்கப்படவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள எற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க 2021 ஆம் நிதி அண்டிற்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பான கணக்காய்வு நோக்கெல்லை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவு | சேவை தருனரினால் ஒவ்வொரு மாதத்திற்குமுரிய ஊழியர்களின் பங்களிப்பு பணத்தை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் சபைக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் கம்பனியால் பங்களிப்பு பணத்தை செலுத்துவதிலுள்ள தாமதத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 15,723 மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | இத்தாமத்தினை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2017 இன் 24 ஆம் இலக்கஉள்நாட்டு இறைவரி அதிகாரச் ச்ட்டத்தின் 120 (ஏ) பகுதி | சேவை தருனரினால் ஊழியர்களிடமிருந்து உழைக்கும் போதே வரி செலுத்துதலாக மாதாந்தம் கழிக்கப்பட்ட பணத்தை அடுத்துவரும் மாத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2015, 2016, 2017 ஆகிய ஆண்டுகள் தொடர்பாக உழைக்கும் போதே செலுத்தும் வரியாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 326,000 பணம் முறையே 8, 7, மற்றும் 6 ஆண்டுகள் தாமதித்து 2023 செப்தெம்பர் 14 ஆந் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | இந்த அனைத்து கொடுப்பனவுகளும் தற்பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தற்பொழுது கொடுப்பனவுகள் தாமதிக்காது முறைப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகாரச் சட்டம் | | | | | |
| | (i) | 131(1) ஆம் பிரிவு | (i) | ஒவ்வொரு கம்பனியும் ஐந்தாவது பட்டோலையில் உறுதியாகக் குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய ஆண்டறிக்கையானது ஆகக் குறைத்து ஒவ்வொரு ஆண்டுகக்கும் ஒரு தடவை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தற்பொழுது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டு ள்ளதுடன் ஏனைய ஆண்டறிக்கைகளை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 223(1) ஆம் பிரிவு | (ii) | இப்பிரிவின் பிரகாரம் கம்பனியால் பணிப்பாளர்கள் மற்றும் செயலாளர்கள் தொடர்பான ஒரு பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (iii) | 223(2) ஆம் உபபிரிவுகள் (அ),(ஆ) | (iii) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் செயலாளர்கள் மாற்றமடைந்திருந்தும் இப்பிரிவின் பிரகாரம் அம்மாற்றங்களைப் பதிவுசெய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் பதிவாளருக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கம்பனியின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | | | |
| | (i) | வழிகாட்டி இலக்கம் 2.3 | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்துடன் செயல்நடவடிக்கைத் திட்டம், | | தற்பொழுது தந்திரோபாய திட்டம் அரசாங்க தொழில் | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடாந்த பாதீடு என்பன வரிசை அமைச்சின் செயலாளருக்கும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயற்பாட்டு கையேடு பந்தி இலக்கம் 2 | செயற்பாட்டு கையேட்டின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் செயற்பாட்டு முறைமை மற்றும் நிருவாக முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையிலுள்ள செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | செயற்பாட்டு கையேட்டின் பந்தி இலக்கம் 6.7 | கம்பனியால் மீளாய்வாண்டில் வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | செயற்பாட்டு கையேடு பந்தி இலக்கம் 7.3 | கம்பனி பணிப்பாளர் சபையினால் பிரதான செயற்பாட்டு குறிகாட்டி (KPI), அங்கீகரித்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டுடன் (KPI) காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் குறிகாட்டி தயாரிக்கப்பட்டு கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மீளாய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையிலுள்ள செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | செயற்பாட்டு கையேடு பந்தி இலக்கம் 7.4 | பணிப்பாளர்கள் சபையினால் கம்பனியின் பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம், தொழிற்படு மூலதனம், காசுப் பாய்ச்சல், திரவத் தன்மை மட்டம், கடன் நிலைமை (Debt Position) என்பன தொடர்பான அறிக்கைகள் மாதாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | செயற்பாட்டு கையேடு பந்தி இலக்கம் 7.5 | கம்பனியால் மாதாந்தம், காலாண்டு ரீதியாக மற்றும் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்ற செயலாற்றல் அறிக்கைகள் பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அறிக்கைகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் | வரைபு ஆண்டறிக்கையும் இறுதிக் கணக்குகளும் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய | எதிர்காலத்தில் ஆண்டறிக்கைகளை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். 2020 | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்க சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 6.6 | போதிலும் கம்பனியால் மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகள் 20 மாதங்கள் தாமதித்து அதாவது 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டு ள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 196,388 இலாபமாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 771,256 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 967,644 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றம் கம்பனியின் செயற்பாட்டு வருமானம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் ரூபா 209,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டு ஒரு வாயு சீராக்கி இயந்திரம் இதற்கு முன்னர் கம்பனியின் அலுவலகம் அமைந்திருந்த கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த வாயு சீராக்கி இயந்திரம் தற்பொழுது கம்பனியின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | இந்த வாயு சீராக்கி இயந்திரமானது இதற்கு முன்னர் கம்பனியின் அலுவலகம் அமைந்திருந்த கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்தது. அக்கட்டிடத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் வாயு சீராக்கி இயந்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இதனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத:துக்கள் உச்ச இயலளவில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் ரூபா 125,000 தொகையான கணனி இயந்திரங்களை | எதிர்காலத்தில் இப்பெறுகை நடவடிக்கைகளானது முறைப்படியாக மேற்கொள்ளப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்பார்த்த குறிக்கோளை பெறுகையின் சிக்கனத் தன்மை, காலத்திற்குப் பொருத்தமான தன்மை மற்றும் தரத்தினை உச்சப்படுத்தக்கூடிய வகையில் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |

### 3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் ஆளணியினர் 08 நபர்களாக இருந்த போதிலும் கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை அல்லது ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தந்திரோபாயத் திட்டத்தினை அங்கீகரித்ததன் பின்னர் ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |